TAMIL MURASU, 5 NOV 2009

# இந்தியாவின் அமைப்பு முறையை ஏற்றுக்கொள்க: அமைச்சர் சண்முகம்

உலகம் இந்தியாவைப் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் இந்தியாவும் உலகத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சட்ட அமைச்சர் கா. சண்முகம் தெரிவித்தார்.

"இந்தியா ஒரு தனித்தன்மை கொண்ட நாடு. அதை அனைத்துலக அளவில் எடை போடக் கூடாது," என்றும் அவர் சொன்னார்.

கிராண்ட் ஓட்டலில் நேற்று நடைபெற்ற 5வது அனைத்துலக தெற்காசிய மாநாட்டில் பேசிய அமைச்சர் கா. சண்முகம், இந்தியாவை வெளியே இருந்து பார்க்கும் ஒரு மனிதராக தமது கருத்துகளை வெளியிட்டார்.

"இந்தியா வித்தியாசமானது, தனித்தன்மை கொண்டது. வெளிநாட்டினர் இந்தியாவின் அமைப்பு முறையை ஏற்றுக் கொண்டு, அதற்கேற்பச் செயல்படவேண்டும்," என்றார் திரு கா. சண்முகம்.

"இந்தியா வித்தியாசமானது, தனித்தன்மை கொண்டது என்பதை ஏற்றுக் கொள்வோம். மற்ற சமூகங்களோடு நாம் ஒப்பிட்டால், நமக்குத்தான் மனக்குலைவு வரும்" என்றும் அவர் சொன்னார்.

"இந்தியாவின் அரசியல் அமைப்பு முறையைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் செய்யக் கூடியவற்றைக் கண்கூடாக மதிப் பிடுவோம். அறுதியிடுவதையும் கற்பனைக் கோட்டை கட்டு வதையும் நிறுத்துவோம். சிரமங் களைப்புரிந்துகொண்டு, கண் கூடான உண்மைகளை ஏற்போம்.

"அப்போதுதான், எதிர்பார்ப்பு களுக்கும் உண்மை நடப்பு களுக்கும் இடையில் இடைவெளி இருக்காது. அல்லது இடைவெளி குறைவாக இருக்கும்" என்றார் அவர்.

"இந்தியா பரந்த மக்கள் கலவை கொண்டது. அதன் புவியியல், வரலாறு, தனித்தன்மை வாய்ந்த அரசியல் நடைமுறை ஆகிய வற்றையும் கருத்தில் கொண்டால் செய்ய வேண்டியவை என பெரும் பாலோர் ஏற்கும் அடிப்படை வசதிகள், கல்வி போன்றவற்றின் பட்டியலை அதுபோன்ற அமைப்பு முறையில் நிறைவேற்றுவது அவ்வளவு சுலபமல்ல என்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தெற்காசியாவின் மிகப்பெரிய பொருளாதாரத்தைக்கொண்ட



கோப்புப் படம்

> ‘அறிவுக்கூர்மை உள்ள முதலீட்டாளர்களுக்கு அதிக நம்பிக்கை அளிக்கும் நாடு இந்தியா. இதில் அறிவுக்கூர்மை என்ற சொல்லை வலியுறுத்துகிறேன்.’
>
> - அமைச்சர் கா. சண்முகம்

இந்தியா, நிதி நெருக்கடி நிலைக்குப் பிறகு எவ்வாறு வளர்ச்சி அடையும் என்பது பற்றியும் தென் கிழக்காசிய நாடுகளுடனான அதன் தொடர்பு பற்றியும் அமைச்சர் தமது உரையில் பட்டியலிட்டார்.

"பொருளியல் ரீதியில் வளர்ச்சி அடையும் இந்தியா, இவ் வட்டாரத்தில் அதிக பங்காற்ற முடியும்.

"இந்தியாவின் தனியார் துறை இதற்கு முன்னோடியாகத் திகழலாம்," என்று 2ம் உள்துறை அமைச்சருமான கா. சண்முகம் தெரிவித்தார்.

இந்திய நிறுவனங்களும் தொழிலதிபர்களும் இவ்வட்டாரத்தில் தொழில் நடத்த சிங்கப்பூரைக் கவர்ச்சியான தளமாகக் கருதுவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

"இதை நாங்கள் தொடர்ந்து செய்து வருவோம். தொழில் சாத்தியம் பொருளியல் நெருக்கடிக்குப் பிறகு நிறைவேற வாய்ப்பிருக்கிறது.

"அறிவுக்கூர்மை உள்ள முதலீட்டாளர்களுக்கு அதிக நம்பிக்கையளிக்கக்கூடிய நாடு இந்தியா. இதில் அறிவுக்கூர்மை என்ற சொல்லை வலியுறுத்து கிறேன்" என்றார் திரு சண்முகம்.

8 887332 357062